**நியாகம பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 18 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 01 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஒக்தோபர் 01 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முறைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் நியாகம பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமான நிலைமையினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

கணக்குகளைத் தயாரிக்கும் போது பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது தேசிய கடன் அபிவிருத்தி நிதியத்திற்குச் செலுத்தப்பட்டிருந்த தொகை ரூபா 527,154 மற்றும் வழங்கல்கள், உபகரணங்களின் என்பனவற்றின் பெறுமதி ரூபா 48,855 இனால் கூடுதலாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) கடைகளை வாடகைக்கு விடும் போது அறவிடப்பட்டிருந்த ரூபா 11,150,200 பெறுமதியான கைப்பண தொகை பொது ஒப்பந்தக் கணக்கிற்கு செலவு வைக்கப்படுவதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் போது வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது நிதிக்கூற்றுக்களில் ஏக்கர் வரி வருமானம் ரூபா 500 இனாலும் வியாபார அனுமதிப்பத்திர வருமானம் ரூபா 49,000 இனாலும் நிர்மாண வரி வருமானம் ரூபா 52,000 இனாலும் கூடுதலாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(ஈ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 07 ஊழியர்களின் 39 சம்பளமற்ற விடுமுறை நாட்களுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 15,160 ஆன தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட 04 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகளிடையே ரூபா 188,909 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 41,610,582 கூட்டுத்தொகையான காணி மற்றும் கட்டிடங்களுக்கான உறுதிகள் மற்றும் ரூபா 218,586 பெறுமதியான வைப்புக்கள் தொடர்பான அட்டவணைகள், ரூபா 299,142 கூட்டுத்தொகையான நிர்மாணங்களிற்கான ஒப்பந்தங்கள், கொடுப்பனவு அறிக்கைகள், அளவீட்டு அறிக்கைகள் மற்றும் நிர்மாண ஆவணங்கள் என்பனவற்றை சமர்ப்பிக்காத காரணத்தினால் கணக்காய்வின் போது அவற்றைத் திருப்திகரமாகப் பரீட்சிக்க முடியவில்லை.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இனங்காமை**

நிதிப் பிரமாணம் 570 மற்றும் 571(1)(2) பிரகாரம் ரூபா 196,181 கூட்டுத்தொகையான 08 தீர்வையாகாத வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் செலவினத்தை விஞ்சிய மீண்டுவரும் வருமானம் ரூபா 6,113,739 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் போது சபையின் வருமானத்தை விட குறைந்த மீண்டுவரும் செலவு ரூபா 1,299,322 ஆக காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 7,413,061 ஆன வளர்ச்சி காட்டப்பட்டிருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு ஆகிய இரு ஆண்டுகளிலும் வருமானத்திற்கான உதவிகள், சுய உழைப்பு வருமானம் மற்றும் மீண்டுவரும் செலவினம் என்பவற்றினது விபரப் பொழிப்பு பின்வருமாறு,

| ஆண்டு | மொத்த மீண்டுவரும் வருமானம் | வருமான மானியம் | சுய வருமான ஈட்டல் | மொத்த மீண்டுவரும் செலவினம் | சுய உழைப்பு வருவாயிலும் கூடிய மீண்டுவரும் செலவினம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2015 | 34,729,908 | 20,585,222 | 14,144,686 | 28,616,169 | 14,471,483 |
| 2014 | 28,514,501 | 18,719,033 | 9,795,468 | 29,813,823 | 20,018,355 |
| 2013 | 22,084,201 | 9,679,260 | 12,404,941 | 21,251,645 | 8,846,704 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சபைக்கு வருமான உதவிகள் கிடைப்பதில் வளர்ச்சி காணப்பட்டாலும் சபையின் மீண்டுவரும் செலவினம் தொடர்ச்சியாக அதிகரிக்கும் வேகத்தில் அதிகரித்திருந்தது. இந்நிலைமையை இனங்கண்டு செலவினத்தைக் கட்டுப்படுத்திக் கொள்வது தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டில் சபையின் சுய உழைப்பு வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 14,471,483 ஆகக் காணப்பட்டது.

(iii) சபைக்கு வருமான மானியம் கிடைக்காமல் இருந்தால் சபையின் மீண்டெழும் செலவினத்தை மேவுகை செய்வதற்கு இயலுமையும் இல்லையெனக் காட்டப்பட்டிருந்தது.

(iv) மேற்படி (i) தொடக்கம் (iii) பந்தி வரை காட்டப்பட்டுள்ள விடயங்களுக்கு அமைய, வருமானத்தைப் அதிகரித்துக் கொள்வதற்கு சபை கவனம் செலுத்த வேண்டுமெனவும் அதற்காக முறையான திட்டமொன்றைத் தயாரித்து செயற்படுத்த வேண்டியதுடன் அவ்வாறு இல்லை எனின், நிதிக்கட்டுப்பாட்டில் காணப்படும் பலவீனம் காரணமாக தொடர்ந்தியங்குதல் தொடர்பாக சிக்கல்கள் ஏற்படலாம் எனக் கணக்காய்வின் கருத்தாகும்.

(ஆ) மீளாய்வாண்டின் மூலதன வருமானத்தை மிகைத்து ரூபா 5,213,075 ரூபா ஆன மூலதனச் செலவினம் செலவிடப்பட்டிருந்ததுடன், பாதீட்டின் பிரகாரம் மூலதன வருமானத்தில் நூற்றிற்கு 09 சதவீதமளவு சிறிய தொகையே செலவிடப்பட்டிருந்தது.

**2.3 வருமான நிருவாகம்**

**2.3.1 வீத வரி மற்றும் ஏக்கர் வரி**

மீளாய்வாண்டின இறுதியில் வீத வரி நிலுவை ரூபா 436,624 ஆகவும், ஏக்கர் வரி நிலுவை ரூபா 87,344 ஆகவும் காணப்பட்டதுடன் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 158(1)(அ) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.3.2 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 1,812,268 கிடைக்க வேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவத் திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பதவியணியினர் திட்டத்தின் பிரகாரம், 10 பதவிகளுக்கான வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியனரை விஞ்சிய பதவியணயினர் எண்ணிக்கை 02 ஆகும். வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பிலும் மிகைப் பதவியணியினரை முறைப்படுத்துவதற்கு சபையினால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையில் பணி புரிந்த பதவியணியினருக்காக ரூபா 713,115 பெறுமதியான ஊழியர் நம்பிக்கை நிதியக் கொடுப்பனவு செலுத்தப்படாது நானாவித வைப்பின் கீழ் பேணப்பட்டிருந்தது.

(ஆ) அறவீடுகள் நிலுவையாக காணப்படும் 06 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 18,401 தொகையான கடன் மீதி அறவிடப்பட வேண்டி இருந்த போதிலும் அம்மீதிகளைத் தீர்வுசெய்வதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.2 திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பிட்டிகல மஹவத்த பிரதேசத்தில் 1 ½ ஏக்கர் காணியில் ரூபா 50,098,338 செலவு செய்து கட்டிடமொன்றும் கொம்போஸ்ட் அறையொன்றும் நிர்மாணிக்கப்பட்டு நிலையப் பொறுப்பாளர் உட்பட மூன்று ஊழியர்கள் இணைக்கப்பட்டிருந்த போதிலும் சபையினால் நிரந்தர தீர்வொன்றிற்காக 2015 யூன் 15 இலிருந்து செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாதமொன்றுக்கு ரூபா 5,000 வீதம் செலுத்தி தற்காலிக அடிப்படையில் பெருந்தோட்ட கம்பனியொன்றுக்குரிய காணியொன்றில் சபை அதிகாரப் பிரதேசத்தில் சேரும் கழிவுப்பொருட்கள் இடப்பட்டிருந்த போதிலும் சபையினால் நிரந்தர தீர்வொன்றாக செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் உள்ளடக்கிய செலவின விடயமொன்றிற்கான ரூபா 478,043 ஆன மொத்த ஏற்பாடும், ஏனைய 07 செலவின விடயங்களில் ரூபா 100,218,409 சேமிப்புக்களும், இன்னுமொரு செலவின விடயமொன்றில் ரூபா 1,475,114 தொகையான நிதி ஏற்பாட்டின் வரையரையை விஞ்சிய செலவினமும் 05 வருமான விடயங்களில் ரூபா 29,228,882 இலக்கினை அடையாத வருமானமும் இருந்தமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய தபபா/யஹ/01/ந.வ.வே ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரது (தென்மாகாணம்) சுற்றறிக்கையின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) வாகனக் கட்டுப்பாடு

(உ) மனிதவள முகாமைத்துவம்